### சாலை விபத்தில் மரணமடைந்த சேலம் கிழக்கு மாவட்டக்

# கழகத் தோழர் ஆர்.முருகன் குடும்பத்திற்கு ரூ.10 லட்சம்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

## இதுவரை 10 கழகக் குடும்பங்களுக்கு ரூ.1 கோடி வழங்கப்பட்டுள்ளது!



**சென்னை, நவ.21-**

**மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாலை விபத்தில் மரணமடைந்த சேலம் கிழக்கு மாவட்டம், ஆர்.முருகன் குடும்பத்திற்கு தி.மு.க. சார்பில் ரூ. 10 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார்.**

இதுவரை 10 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.1 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்.” என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில், விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூரைச் சேர்ந்த திருமதி சரிதா - இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த க.முத்தமிழ்செல்வன் - ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வே.சரவணன் - திருவாரூர் மாவட்டத்தைச் எம்.விக்னேஷ் - கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த குப்புசாமி - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஏ.ராம்பிரசாத் - நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரண்ராஜ் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.பிரகாசம் - திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.மேகலிங்கம் ஆகிய 9 குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து;

சேலம் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான ஆர்.முருகன் அவர்கள், 21.06.2025 சேலம் அருகே திருவாக்கவுண்டலூர் பை-பாஸ் சாலை அருகில் பேருந்து மோதிய விபத்தில் சிக்கி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி 28.06.2025 அன்று உயிரிழந்த மேற்சொன்ன ஆர்.முருகன் குடும்ப நிவாரண நிதியாக, ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையினை, தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், சேலம் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.முருகன் அவர்களின் மனைவி திருமதி எம்.கோமதி அவர்களிடம் நேற்று முன்தினம் (19-11-2025) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் வழங்கினார்.

அதுபோது, கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், எம்.பி., வீரபாண்டி தெற்கு ஒன்றியச் செயலாளர் திருமதி வெண்ணிலா சேகர், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் டாக்டர் ஏ.கே.தருண் ஆகியோர் உடனிருந்தனர்.

### திருநெல்வேலி மாவட்ட – மாற்றுக் கட்சியினர்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்!

## முன்னாள் எம்.எல்.ஏ. வழக்கறிஞர் பால் மனோஜ்பாண்டியன் ஏற்பாட்டில் நிகழ்ச்சி!



**சென்னை, நவ.21-**

**தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஆலங்குளம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் பால் மனோஜ் பாண்டியன் ஏற்பாட்டில் மாற்றுக் கட்சியையைச் சேர்ந்த விருதுநகர் மேற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.எஸ்.கதிரவன் - திருநெல்வேலி மாநகர் மாவட்டச் செயலாளர் டி.எல்.நாராயணன் - அமைப்புச் செயலாளர் சௌ.ராதா ஆகியோர் தலைமையில் 70க்கும் மேற்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.**

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (19.11.2025) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் ஆலங்குளம் தொகுதி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வழக்கறிஞர் பால் மனோஜ் பாண்டியன் அவர்கள் ஏற்பாட்டில், மாற்றுக் கட்சியைச் சேர்ந்த விருதுநகர் மேற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.எஸ்.கதிரவன் - திருநெல்வேலி மாநகர் மாவட்டச் செயலாளர் டி.எல்.நாராயணன் - அமைப்புச் செயலாளர் சௌ.ராதா ஆகியோர் தலைமையில்,

மாற்றுக் கட்சியை சேர்ந்த ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணைய முன்னாள் உறுப்பினர் வீ.ஜெயக்குமார், நாங்குநேரி தொகுதி முன்னாள் செயலாளர் ஆர்.எஸ்.முருகன், கார்த்திகா ஸ்டோர்ஸ் தொழிலதிபர் ஐ.குபேந்திரன், தென்காசி தெற்கு மாவட்ட பொருளாளர் எம்நூருல் அமீன், முதலியார்பட்டி காந்திநகர் ஜமாத் தலைவர் எம்.பஸ்லூர்ரகுமான், கடையம் ஜமாத் தலைவர் சே.அப்துல்ரகுமான், செய்தி தொடர்பாளர் சி.டென்சிங் குசுவாமிதாஸ், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் டி.பாரத், மாநில போக்குவரத்து பிரிவு செயலாளர் எஸ்.ஏ.சேர்மதுரை, திருநெல்வேலி புறநகர் மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் எஸ்.கந்தன், நெல்லை மாநகர் பகுதிச் செயலாளர் சிவஅருணா. அருண்குமார், நெல்லை மாநகர் மாவட்ட சிறுபான்மை பிரிவு செயலாளர் சாந்தகுமார், நெல்லை மாநகர் மாவட்ட எம்.ஜி.ஆர்.இளைஞர் அணிச் செயலாளர் எஸ்.லெனின், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் ஆர்.வினோத்குமார், விருதுநகர் ஒன்றிய வர்த்தக அணிச் செயலாளர் தா.இம்மானுவேல்ராஜா, சேரன்மாதேவி ஒன்றியச் செயலாளர் ஏ.கணபதி, சேரன்மாதேவி பேரூர்ச் செயலாளர் எஸ்.மாசாணம், சேரன்மகாதேவி கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஜி.சின்னதுரை, கல்லிடைகுறிச்சி பேரூர் செயலாளர் டி.பாலசுப்பிரமணியன், வீரவநல்லூர் பேரூர்ச் செயலாளர் எஸ்.பி.முருகானந்தம், மந்தியூர் ஊராட்சி தலைவர் கல்யாணசுந்தரம், சேரன்மாதேவி மேற்கு ஒன்றியச் செயலாளர் எம்.பத்ரகாளி, நெல்லை மாவட்ட பனை பொருட்கள் கூட்டுறவு சம்மேளம் ஜே. ஜெபராஜ், சேரன்மாதேவி மேற்கு ஒன்றிய பொருளாளர் எஸ்.ஞானபொன்ராஜ்பாண்டியன், மாநில வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் கே.புவனேஸ்வரி, மாநில வழக்கறிஞர் அணி துணைச் செயலாளர்கள் சி.எம்.மாரிசெல்லையாபிரபு, வீ.நீலகண்டன், ஓம்சேர்மபிரபு, வீ.ஆனந்த், கூடுதல் அரசு முன்னாள் குற்றவியல் வழக்கறிஞர்கள் பி.அருள்மொழிமாறன், ஆர்.சூர்யபிரகாஷ், மதுரை மாவட்ட வழக்கறிஞர் பிரிவு துணைச் செயலாளர்கள் ஜெ.திலிப்கு மார், அர்ஜுனன், அரசு முன்னாள் வழக்கறிஞர் ஆ.கார்த்திக், வீட்டுவசதி வாரிய முன்னாள் அரசு வழக்கறிஞர் ராஜேஷ்குமார், வழக்கறிஞர் பிரிவைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் சுரேஷ், விக்னேஸ்வ ரன், பி.ரக்ஷந்த் ஆலங்குளம் தொழிலதிபர் சி.குமார், மதுரை தமிழ்நாடு உணவுப் பொருள் வியாபார்கள் சங்க சண்முகதர்ஷன், மாவட்ட எம்.ஜி.ஆர்.இளைஞர் அணி இணைச் செயலாளர் வி.கனக பிரசாத், ஆலங்குளம் பேரூர் இணைச் செயலாளர் வி.சேர்மக்கனி (எ) கணேசன், ஆலங்குளம் தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர் கே.அருண்குமார், மாவட்ட அம்மா பேரவை பொருளாளர் சி.கண்ணன், ஆலங்குளம் பேரூர் இளைஞர் அணி துணைச் செயலாளர் ஏ.சதண்ராஜ், கல்லிடைக்குறிச்சி அம்மா பேரவை செயலாளர் எம்.அய்யப்பன், மாவட்ட பிரதிநிதி சி.பி.ஆறுமுகம், அம்மா பேரவை செயலாளர் வீரவந ல்லூர் எஸ்.முப்பிடாதி, சேரன் மகாதேவி ஒன்றிய இணைச் செயலாளர் ஜி.ஜான்சன் உள்ளிட்ட 70க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், திருநெல்வேலி மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், திருநெல்வேலி மத்திய மாவட்டப் பொறுப்பாளர் அப்துல்வகாப், எம்.எல்.ஏ., திருநெல்வேலி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் கிரகாம்பெல், ஆலங்குளம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் பால் மனோஜ் பாண்டியன் ஆகியோர் உடனிருந்தனர்.

### “உடன் பிறப்பே வா” நிகழ்ச்சியில் – முதல்வர் மு.க.ஸ்டாலின்

# கழக நிர்வாகிகளின் விருப்பங்களைக் கேட்டறிந்து நிறைவேற்றினார்!

## கழக நிர்வாகிகளும் – தொண்டர்களும் பெருமிதம்!

*சென்னை, நவ.21-*

*சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக பகுதி- நகர- ஒன்றிய - பேரூர் கழகச் செயலாளர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சந்திக்கும் நிகழ்வு 13.6.2025 அன்று தொடங்கப்பட்டது.*

*அந்த சந்திப்பு நிகழ்வின் போது, மக்களின் கோரிக்கைகளைக் கேட்பதுடன், கழகத்தினரின் விருப்பங்களையும் அறிந்து கொள்வதற்காகத் தான் அறிவாலயத்தில், ‘உடன்பிறப்பே வா’ எனும் தொகுதிவாரியான நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டம் நடைபெற்று வருகிறது என கழகத் தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.*

*கடந்த 1.6.2025 அன்று மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் இந்தச் சந்திப்பு குறித்து கழகத் தலைவர் அவர்கள் உரையாற்றும் போது அறிவித்தார். அதன்படியே, கழக நிர்வாகிகளை ‘ஒன் டூ ஒன்’-ஆக தலைவர் அவர்கள் நேரடியாக சந்தித்து அவர்கள் மனதில் உள்ளதை கேட்டறிந்து வருகிறார்.*

*கழகத் தலைவர் அவர்கள், கழக நிர்வாகிகளிடம் அந்தந்த சட்டமன்றத் தொகுதிகளில் கழக ஆட்சியின் மீது ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் ஆகியோரது ஆதரவு நிலை குறித்தும், மக்களின் எதிர்பார்ப்புகள் குறித்தும் கேட்டறிகிறார்.*

*திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் சிறப்பான திட்டங்களையும், சலுகைகளையும், சாதனைகளையும், மாணவ- மாணவிகள், பெண்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் அறிந்திடும் வகையில் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அறிவுரைகள் வழங்கி வருகிறார்கள்.*

*நேற்று முன்தினம் (19.11.2025) 93ஆவது தொகுதியாக திருநெல்வேலி மேற்கு மாவட்டம் ஆலங்குளம் தொகுதி நிலவரம் குறித்து தெற்கு ஒன்றிய செயலாளர் சிவகுமார் அவர்களிடம் கேட்டறிந்தபோது, தனது தந்தையான கழக மூத்த உறுப்பினர், முதலமைச்சர் அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ள விருப்பப் படுவதாக தெரிவித்தார். முதலமைச்சர் அவர்கள் உடனடியாக தொலைபேசி வாயிலாக சிவகுமார் அவர்களின் தந்தையாரை தொடர்பு கொண்டு அவர் உடல்நலம் குறித்து விசாரித்தார். அத்துடன், “தாங்கள் புகைப்படம் எடுத்துக் கொள்ள விரும்புவதாக தெரிவித்தீர்களாம்”, நாளை அறிவாலயத்திற்கு வரமுடியுமா, வந்தால் தங்கள் விருப்பப்படி புகைப் படம் எடுத்துக்கொள்ளலாம்” என்று கூறினார்.*

*முதலமைச்சர் அவர்கள் தம் தந்தையாரிடம் பரிவுடன் பேசியதைக் கேட்டவுடன் திரு.சிவகுமார் கண்ணீர் மல்க முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார். அப்போது முதலமைச்சர் அவர்கள், சிவகுமாரிடம் நாளையே, தங்கள் தந்தையாரை அழைத்து வருமாறு கூறினார்.*

*மேலும், விபத்தில் சிக்கி காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் தூத்துக்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் சரவணகுமார் முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு உடல்நலம் குறித்து விசாரித்தார்.*

*முதலமைச்சர் அவர்கள் தொகுதி நிலவரம் குறித்து கேட்டறியும் போதே கழக நிர்வாகிகளின் குடும்பத்தார் நலனையும் கேட்டறிவதுடன், அவர்கள் தெரிவிக்கும் குறைகளையும் உடனடியாக நிவர்த்தி செய்து வருகிறார் என்பதற்கு இந்த நிகழ்ச்சியே ஒரு முக்கியமான சாட்சியாகும். இதன் மூலம் கழக நிர்வாகிகளும், தொண்டர்களும் தம்முடைய குடும்பத்தின் மீது கழகத் தலைவராகிய முதலமைச்சர் அவர்கள் செலுத்தி வரும் அக்கறையை நினைத்து பெருமிதம் அடைகிறார்கள்.*

### சேலம் மாவட்டம் – சொனப்பாடி மலைக்கிராமத்தில் வசிக்கும்

# பழங்குடியின மக்களுக்கு ‘மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்’!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் ஆய்வு!



*சேலம்,நவ.21-*

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (19.11.2025) சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரம் குரும்பபட்டி கிராமத்தில் தொடங்கி கருங்காலி கிராமம் மற்றும் குடவம்பட்டி கிராமம் வழியாக 23.5 கி.மீ மலைபாதையில் நடந்தே சென்று சொனப்பாடி மலைக்கிராமத்தில் வசிக்கும் பழங்குடியினர் மக்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு வழங்கப்படும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை ஆய்வு மேற்கொண்டார்கள்.*

*மக்களைத் தேடி மருத்துவம் எனும் மகத்தான திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்05.08.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம்சாமணப்பள்ளியில் தொடங்கப் பட்டது. இத்திட்டத்தின்முதல் பயனாளி திருமதி.சரோஜாம்மாள் எனும் சகோதரிக்கு மருந்து பெட்டகம் வழங்கப் பட்டது. மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்23.02.2022 அன்றுசெங்கல்பட்டு மாவட்டம்சித்தலப்பாக்கம் பகுதியில் 50 இலட்சமாவது பயனாளி திருமதி.பாஞ்சாலை என்பவருக்கு மருந்து பெட்டகம் வழங்கினார்கள். பிறகு முதல்வர் 10.04.2022 அன்றுமதுரை மாவட்டம் மையிட்டாம்பட்டி கிராமத்தில்60 இலட்சமாவது பயனாளி பெரியசாமி என்பவருக்கு மருந்து பெட்டகம் வழங்கினார்கள். பிறகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால்21.06.2022 அன்று நாமக்கல் மாவட்டம்மேலூர் பகுதியில்75 இலட்சமாவது பயனாளி திருமதி.நல்லம்மாள் என்பவருக்கு மருந்து பெட்டகம் வழங்கினார்கள். அமைச்சர் அவர்களால்06.08.2022 அன்று சைதாப்பேட்டை, கோதாமேடு பதியில் 80 இலட்சமாவது பயனாளி திருமதி. சாந்தி என்பவருக்கு மருந்து பெட்டகம் வழங்கினார்கள். பிறகு 25.09.2022 அன்றுவிருகம்பாக்கம் பகுதியைச் சார்ந்த 90 இலட்சமாவது பயனாளி திருமதி.ஜெனிதாபேகம் என்பவருக்கு அமைச்சர் மருந்து பெட்டகம் வழங்கினார்கள். மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 29.12.2022 அன்று திருச்சி மாவட்டம், சன்னாசிப்பட்டி கிராமத்தில் 1 கோடியாவது பயனாளி மீனாட்சி என்பவருக்கு மருந்து பெட்டகம் வழங்கினார்கள். மீண்டும் முதலமைச்சர் 18.12.2024 அன்றுஈரோடு மாவட்டம், நஞ்சனாபுரம் கிராமத்தில் 2 கோடியாவது பயனாளி திருமதி.சுந்தராம்பாள் என்பவருக்கு மருந்து பெட்டகம் வழங்கினார்கள். பிறகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் 17.11.2025 அன்றுதஞ்சாவூர் மாவட்டம், பிள்ளையார்நத்தம் ஊராட்சி, தென்னங்குடி கிராமத்தில் 2.50 கோடியாவது பயனாளி திருமதி.மனோன்மணி என்பவருக்கு மருந்து பெட்டகம் வழங்கினார்கள். இத்திட்டம் 2.5 கோடியாவது பயனாளியை அடைந்திருப்பதை எண்ணி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சமூக வலைத்தளப் பக்கத்தில் பாராட்டப்பட்டது என்றார்.*